# <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| O.S. No.242/2018 | Date : 22.02.2024 | PW 1 |
|---|---|---|
| Name சாந்தி | S/o. **மணி** | |
| Evidence Recorded Time: 4.20 P.M.. to 4.40 P.M | | |

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் என்ன படித்துள்ளேன் என்றால 5ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கில் 7 ம் பிரதிவாதியாக என் கணவர் இருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பழனியம்மாள், வேணி, ராஜேந்திரன் ஆகியோர் தாக்கல் செய்த வழக்கில் 8ம் பிரதிவாதி மைனர் பிருந்தாவிற்கு என் மாமனார் கார்டியனாக இருந்தார் என்றால் சரிதான். என் கணவருக்கும் , பிருந்தாவிற்கும் சேர்த்து எம்.கே.அர்ஜுனன் என்பவர் ஆஜராகியிருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 39/2004 வழக்கில் அசல் ஆவணங்களும் இந்த வழக்கில் நகல் ஆவணங்கள் போடப்பட்டதா என்றால் தெரியாது. என் மாமனார், கணவர் ஆகியோருக்குத்தான் தெரியும். இந்த வழக்கிற்கான 1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் மேற்சொன்ன 39/2004 வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. 39/2004 வழக்கானது 29.12.2005 ல் என் ஆவணங்களை பரிசீலனை செய்து முதல்நிலை தீர்ப்பானை பிறப்பிக்கப்பட்டது என்று சொன்னால் தெரியாது. என் கணவரும் மாமனாரும் அசல் வழக்கு 39/2004 ல் சொன்ன தீர்ப்பை எதிர்த்து 15/2006 ல் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்று சொன்னால் செய்யவில்லை. அந்த வழக்கில் என் கணவரும், மாமனாரும் 7,8 மனுதாரர்களாக இருந்து வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு தாக்கல் செய்து விட்டு என் கணவர், மாமனார் ஆகியோர் ஆஜராகவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 10 பிரதிவாதி கோவிந்தன் அசல் வழக்கு 39/2004 ல் சாட்சியாக விசாரித்து அவருடைய சாட்சியத்தில் எனக்கு பாத்தியப்பட்ட ஆவணங்களை குறியிடு செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்த வழக்கில் இறுதி நிலை தீர்ப்பானை 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. ஆணையாளர் வந்து என் வீட்டை அளந்தார்கள் அப்போது கிராம நிர்வாக அதிகாரி வந்தார்கள் என்றாலும் சரியல்ல. ஆணையர், கிராம நிர்வாக அதிகாரி வந்தார்கள். நாங்கள் அவர்களை அளக்க விடவில்லை. எங்கள் சொத்து என்று சொன்னோம். அவர்கள் முறைப்படி அளந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.எ 2010 ல் அளக்க வந்தார்கள் அப்போது தான் நான் பொய்யான தீர்ப்பு என்று சொன்னேன். என் தரப்பில் ராமகிருஷ்ணன் என்ற வழக்கறிஞர் ஆஜரானார் என்றால் சரியல்ல. ராமகிருஷ்ணன் வழக்கறிஞர் வந்தது என்

மாமனார், கணவருக்கு தான் தெரியும். என் கணவர் 2015ல் இறந்தார். 39/2004 வழக்கு போட்டது எனக்கு தெரியாது என்றும், அதில் முதல் நிலை தீர்ப்பாணை பெற்றுக் கொண்டது தெரியாது என்றும் 2018ல் தான் தெரிய வந்தது என்று பொய்யாக இந்த வழக்கில் தெரிவித்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.வா.சா.ஆ.9 27.07.2017ல் பிரதிவாதிகள் கணம் நீதிமன்றத்தில கொடுத்த மனுவிற்கு பிறகு தான் இந்த வழக்கு பற்றி தெரிய வந்தது என்று பொய்யாக தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என் பிரமான பத்திரத்தில் சொன்னபடி கிரைய பத்திரத்தில உள்ள சொத்தில் நான் சுவாதீனத்தில் உள்ளதாக சொல்லியுள்ளேன். ஆனால் நான் சுவாதீனத்தில் இருப்பதாக காட்டக்கூடிய பட்டா, சிட்டா எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சுவாதீனத்தில் இருந்தால் பட்டா, சிட்டா ஆகியவற்றை தாக்கல் செய்திருப்போம் என்றாலும் சுவாதீனத்தில இல்லாத காரணத்தினால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 39/2004 வழக்கில் 1 முதல் 6 பிரதிவாதிகள் இந்த வழக்கில் கண்ட 1 முதல் 3 பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து அசல் வழக்கு 39/2004ல் மோசடியாக ஒரு தீர்ப்ாணையை பெற்றுள்ளதாக நான் சொன்னது பொய் என்றும் அதை நான் கற்பணையாக இந்த வழக்கிற்காக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 39/2004 தீர்ப்பாணையை பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு கிடைக்கக்கூடிய உரிமையை பொறுத்துஇந்த வழக்கு மூலமாக கேள்வி கேட்க எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என் ஆவணங்களுடைய செல்லும் தன்மை குறித்து ஏற்கனவே அசல் வழக்கு 39/2004ல் முடிவு செய்யப்பட்டுவிட்டதால் அந்த ஆவணங்கள் பொறுத்து இந்த வழக்கில் நான் எந்த பரிகாரமும் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. 39/2004 ன் தீர்ப்பாணையின் படி இந்த வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கரிய சொத்து உரிமையை தடுக்க முடியாது என்றாலும் இந்த வழக்கு 1 முதல் 3 பிரதிவாதிகளை பொறுத்து தள்ளுபடி ஆகவேண்டும் என்றாலும் சரியல்ல.39/2004 வழக்கின் இறுதிநிலை தீர்ப்பானையை நான் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டிருப்பது சட்டத்திற்கு விரோதமானது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/– PW1

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.